**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி சாலைகள் அடிக்கடை சேதமடைவதைத் தடுக்க சில சாலைகளை கான்கிரீட் சாலைகளாக மாற்றவதற்கான திட்ட மதிப்பீடு ரூ.20.53 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.21.66 கோடியை நிதி நிறுவனங்களிலிருந்து பெற்று பணிமேற்கொள்ள அனுமதி அளித்தல்- ஆணையிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.1) துறை**

அரசாணை (இருபதாண்டு) எண். 151 நாள். 22.12.2003

படிக்கப்பட்டது:

சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் எண்.பி4/2945/2003, நாள் 26.7.2003 மற்றும் 2.12.2003

ஆணை:-

சென்னை மாநகராட்சி ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சீரமைப்பது குறித்து 11.11.2002 அன்று நடத்திய ஆய்வுக் கூட்டத்தில், சென்னை நகரில் சாலைகள் அடிக்கடி சேதமடைவதை தடுக்கும் பொருட்டு குறிப்பிட்ட சில தார் சாலைகளை சிமெண்ட கான்கீரிட் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று அறிவுறத்தப்பட்டதன் அடிப்படையில் முதல் கட்டமாக 17 சாலைகளைக் கண்டறிந்து 13 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூ26.00 கோடி தோராய மதிப்பீட்டில் கான்கிரீட் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டது. இந்த 17 சாலைப் பணிகளில் ஒரு பணியான லேக் ஏரியா 7வது தெரு மற்றும் லேக் ஏரியா முதல் பிரதான சாலை பகுதியினை மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்து நிறைவேற்ற மண்டல -7 மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றுமொரு பணியான காக்ரேன் பேசின்சாலை, கத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலை ஆகியவை அடங்கிய தொகுப்பிற்கு கலந்தறிபவர்கள் (Consultants) சமர்ப்பித்துள்ள மதிப்பீட்டுத் தொகையான ரூ.14.30 கோடி, மொத்த திட்ட மதிப்பில் 50 ரூ-க்கு மேல் உள்ளதாலும், மாநகராட்சியின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டும் இப்பணி கைவிடப்பட்டது. அதற்கு பதிலாக இத் தார் சாலைகளை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 15 சாலைப் பணிகள் 7.545 கிலோ மீட்டர் நீளத்திற்கு மொத்தம் ரூ.21.66 கோடி மதிப்பீட்டில் கலந்தறிபவர்களால் தயாரிக்கப்பட்டது. இவற்றில் மூன்று பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ஒவ்வொன்றும் ரூ.50 இலட்சத்திற்குள் உள்ளதால் இதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. சட்டமன்ற பேரவையில் 2003-2004-ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சித்துறை மான்ய கோரிக்கையின்போது இத்திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி சேவைக் கழகம் (TNUIFSL - TNUDF) நியமித்த கலந்தறிபவர்களான மெஸர்ஸ் வில்பா ஸ்மித் அசோசியேட் (பிரைவேட்) லிமிடெட் இதற்கு தேவையான பணிகளை மேற்கொண்டது. அதன் இவர்கள் சமர்ப்பித்த 7030 மீட்டர் நீளமுள்ள கீழ்கண்ட 12 பணித் தொகுப்புகளுக்கான மதிப்பீடுகள் ஒவ்வொன்றும் ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதகள் நிதி சேவைக் கழகம் (கூசூருஜகுளுடு - கூசூருனுகு ) நியமித்த கலந்தறிபவர்களான மெஸர்ஸ் வில்பா ஸ்மித் அசோசியேட் (பிரைவேட்) லிமிடெட் இதற்கு தேவையான பணிகளை மேற்கொண்டது. அதன் இவர்கள் சமர்ப்பித்த 7030 மீட்டர் நீளமுள்ள கீழ்கண்ட 12 பணித் தொகுப்புகளுக்கான மதிப்பீடுகள் ஒவ்வொன்றும் ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் உள்ளதால் அரசின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு பிரேரணை அனுப்புவதற்கும், மேலும் அவசர அவசியத்தை கருதி அரசின் ஆணையை எதிர்நோக்கி கீழ்கண்ட பணிகளுக்கான ஒப்பங்களை கோரவும் அரசின் ஆணை பெறப்பட்ட பின்பு ஒப்பங்களை பரிசீலிக்கவும் மன்றத் தீர்மானங்களின் மூலம் அனுமதி பெறப்பட்டது.

**சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் அமைக்கப்படவுள்ள இடங்கள்**

| வ.எண். | வார்டு எண். | சாலையின் பெயர் | நீளம் மீட்டரில் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | மன்றத் தீர்மான எண்/நாள். |
|---|---|---|---|---|---|
| 01 | 1 | முத்தமிழ் நகர் 5-வது பிரதான சாலை(வடக்கு நிழற்சாலை முதல் தெற்கு நிழற்சாலை வரை) | 398 | 82.00 | 251/03 30.05.03 |
| 02 | 3 | எல்லையா (மு) தெரு (பாரத் பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் நுழைவாயில் முதல் வைத்தியநாதன் பாலம் வரை) | 518 | 131.50 | 252/03 30.5.03 |
| 03 | 3 | எல்லையா (மு) தெரு மன்னப்பன் தெரு முதல் எச்.பி.சி கேட் வரை | 620 | 147.00 | 253/03 30.5.03 |
| 04 | 10 | மணலி சாலை எண்ணூர் நெடுஞ்சாலை முதல் இணைப்பு கால்வாய் பாலம் வரை) | 961 | 266.00 | 254/03 30.5.03 |
| 05 | 7 | வைத்தியநாதன் சாலை (திருவெற்றியூர் நெடுஞ்சாலை சந்திப்பு முதல் வைத்தியநாதன் | 547 | 117.00 | 255/03 30.5.03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பாலம் வரை) | | | |
| 06 | 32 & 33 | சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை (அசோக் பில்லர் முதல் திரு.வி.க.லிங்க் சாலை வரை - வியாசர்பாடி இடுகாடு) | 1370 | 501.00 | 256/03 30.5.03 |
| 07 | 36 | சுந்தரம் தெரு (கணேசபுரம்) | 698 | 152.00 | 257/03 30.5.03 |
| 08 | 68 & 70 | புதிய ஆவடி சாலை (கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை சந்திப்பு முதல் குஜ்ஜி தெரு மற்றும் ராஜீ நாயகன் தெரு சந்திப்பு வரை) | 640 | 281.00 | 258/03 30.5.03 |
| 09 | 107 | டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை (திருமலைப் பிள்ளை சாலை முதல் வித்யோதயா பிரதான சாலை வரை) | 338 | 169.50 | 259/03 30.5.03 |
| 10 | 130 | ஆர்.கே.சண்முகம் சாலை (பழைய சிமெண்ட் கான்கீரிட் சாலை முதல் பி.வி. ராஜமன்னார் சாலை வரை) | 280 | 82.00 | 262/03 30.5.03 |
| 11 | 130 | பி.வி ராஜமன்னார் சாலை (ஆர்.கே சண்முகம் சாலை சந்திப்பு முதல் கன்னிகாபுரம் 4-வது தெரு, 2-வது தெரு இடையில் வரை) | 210 | 69.00 | 263/03 30.5.03 |
| 12 | 130 | டாக்டர் ராமசாமி சாலை (பி.டி ராஜன் சாலை முதல் பழைய கான்கிரீட் சாலை வரை) | 250 | 55.00 | 264/03 30.5.03 |
| | | | 7030மீ | 2053.00 இலட்சங்கள் | |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 12 பணிகள் உள்பட மொத்த 15 பணிகளக்கான மொத்த தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.21.66 கோடியில் 50 விழுக்காட்டினை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் பெருநகர்த் திட்டத்தின் மூலம் (TUFIDCO - MCP) 5 சதவிகித வட்டியிலும், 20 விழுக்காட்டினை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் சொந்த நிதி மூலம் (TUFIDCO OWN FUND) 9.5 சதவிகித வட்டியிலும், 20 விழுக்காட்டினை தமிழ்நாடு

நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி சேவைக் கழகத்திடமிருந்து (TNUIFSL -TNUDF) 9.5 சதவிகித வட்டியில் கடனாக பெறவும், மீதமுள்ள 10 விழுக்காட்டினை மாநகராட்சியின் சொந்த நிதி மூலம் நிறைவேற்றலாம் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திருத்திய மன்றத் தீர்மானம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்

3. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் சென்னை மாநகராட்சி ஆணையர் கீழ்க்கண்டவற்றிற்கு அனுமதி வேண்டியுள்ளார்.

(அ) ரூ.20.53 கோடி திட்ட மதிப்பீட்டுச் செலவில் மொத்தம் 7.03 கிலோ மீட்டர் (7030 மீட்டர்) நீளமுள்ள மேற்சொன்ன 12 கான்கிரீட் சாலைப் பணிகளை மேற்கொள்வதற்கான அரசின் நிர்வாக அனுமதி

(ஆ) மொத்த 15 பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையான ரூ.21.66 கோடியில் 50 விழுக்காட்டினை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் பெருநகர் திட்டத்தின் மூலம் கடனாகப் பெறவும் 20 சதவிகிதம் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு கழகத்தில் சொந்த நிதி மூலம் (TUFIDCO -OWN FUND) கடனாக பெறவும் 20 விழுக்காட்டினை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி சேவைக் கழகம் (TNUIFSL - TNUDF) மூலம் கடனாக பெறவும் மீதமுள்ள 10 விழுக்காட்டுத் தொகையை சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அரசின் அனுமதி

(இ) அவசரம், அவசியத்தைக் கருதி அரசின் ஆணையை எதிர்நோக்கி தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள், நிதி சேவைக் கழகம் (TNUIFSL - TNUDF) நியமித்த கலந்தறிபவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு ஒப்பங்கள் கோர 28.11.2002 நாளிட்ட 453-ம் எண் மன்றத் தீர்மானத்தின் மூலம் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு அரசின் பின்னேற்பு

4. சென்னை மாநகராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்த பின்னர் சென்னை மாநகராட்சி வங்கிகள் அல்லது தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு நிறுவனம் அல்லது பிற நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டி விகிதத்தில் கடனாகப் பெற்று இப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன்

(அ) ரூ.20.53 கோடி திட்ட மதிப்பீட்டுச் செலவில் மொத்தம் 7.03 கிலோ மீட்டர் (7030 மீட்டர்) நீளமுள்ள மேற்சொன்ன 12 கான்கிரீட் சாலைப் பணிளை மேற்கொள்வதற்கான அரசின் நிர்வாக அனுமதியும்

(ஆ) மொத்த 15 பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையான ரூ.21.66 கோடியில் 50 விழுக்காட்டினை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் பெருநகர் திட்டத்தின் மூலம் கடனாகப் பெறவும் 20 சதவிகிதம் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டு கழகத்தில் சொந்த நிதி மூலம் (TUFIDCO -OWN FUND ) கடனாக பெறவும் 20 விழுக்காட்டினை தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி சேவைக் கழகம் (TNUIFSL - TNUDF) மூலம் கடனாக பெறவும் மீதமுள்ள 10 விழுக்காட்டுத் தொகையை சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அரசின்

அனுமதியும்

(இ) அவசரம், அவசியத்தைக் கருதி அரசின் ஆணையை எதிர்நோக்கி தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள், நிதி சேவைக் கழகம் (TNUIFSL - TNUDF) நியமித்த கலந்தறிபவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு ஒப்பங்கள் கோர 28.11.2002 நாளிட்ட 453-ம் எண் மன்றத் தீர்மானத்தின் மூலம் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு அரசின் பின்னேற்பும் அளித்து அரசு இவண் ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 4161/எப்.எஸ்/பி/2003 நாள் 16.12.2003ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்என். விஜயராகவன்
அரசு செயலாளர்

பெறுநர்

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்னை-108

நகல்

அரசு சார்புச் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதித்துறை (ந.நி(ம) கு.வ) துறை, சென்னை-9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்**